
காட்சி கூடம் உரை மொழிபெயர்ப்புகள்

# #SG FASHION NOW




காட்சி கூடத்தின் வரைபடம்

1 ## #SGFASHIONNOW : ஆசிய நாகரிக அரும்பொருளகம் X லாசால்

#SGFASHIONNOW கண்காட்சி, சிங்கப்பூரின் இன்றைய ஆடை அலங்காரத்தையும் ஆசிய பாரம்பரியத்தையும் பிரதிபலிக்கும் வடிவங்களையும் அணுகுமுறைகளையும் ஆராய்கிறது. ஆடை அலங்காரத் தொழில்துறை, கல்வித்துறை பங்காளர்களுடன் கூட்டாகச் செயல்பட்டு, லாசால் கலைக் கல்லூரியின் ஆடை அலங்காரத் துறை மாணவர்களுடன் இக்கண்காட்சி உருவாக்கப்பட்டது. உள்ளூரில் உள்ள வடிவமைப்பாளர்களுக்காக நெசவுத்துணி, ஆடை அலங்காரச் சம்மேளனம் (TaFF) ஆண்டுதோறும் ஏற்பாடு செய்யும் “சிங்கப்பூர் ஸ்டோரீஸ்” எனும் ஆடை அலங்கார வடிவமைப்புப் போட்டியில் வெற்றி பெற்ற படைப்பும் கண்காட்சியில் இடம்பெறுகிறது.

சமகால உள்ளூர் ஆடை அலங்காரங்களை அரும்பொருளகம் காட்சிப்படுத்துவது இதுவே முதல் முறை. சிங்கப்பூரின் இன்றைய ஆடை அலங்காரத்தைப் பற்றி புதுமையான சிந்தனைகளை, குறிப்பாகப் பரந்த ஆசிய சூழலில், இக்கண்காட்சி தூண்டுகிறது.

லாசால் விரிவுரையாளர்களும், கண்காட்சித் தொகுப்பு, பார்வையாளர், கண்காட்சி ஆகிய குழுக்களைச் சேர்ந்த ஆசிய நாகரிக அரும்பொருளக அதிகாரிகளும் வழிகாட்ட, ஐந்து மாணவர்கள் கைவினைக்கலையை மையப்படுத்தி இக்கண்காட்சியைத் தொகுத்தனர். கண்காட்சியில் இடம்பெறும் எட்டு வடிவமைப்பாளர்களும் தனித்துவமான பாணிகளுடன் சிங்கப்பூரில் செயல்படுபவர்கள் அல்லது வெளிநாட்டில் இருக்கும்

சிங்கப்பூரர்கள். அவர்களின் படைப்புகள் அண்மை ஆண்டுகளில் உருவாக்கப்பட்டவை. பொருள்வகை யோசனைகளையும் மெல்ல உருவாகும் ஆடை அலங்காரத்தையும் உள்ளடக்கிய படைப்புகள், குறிப்பிடத்தக்க ஒரு தருணத்தைப் பிரதிபலிப்பதாகக் கருதப்படலாம். ஆடை அலங்காரத் தொழில்துறையைப் பிரதிநிதிக்கும் பன்மயமான நீதிபதிகள் குழு, மாணவர் குழுவின் பரிந்துரையைத் தேர்ந்தெடுத்தது. ஆடை அலங்கார வடிவங்களையும், உடலமைப்புகளையும், அணிபவரின் அடையாளங்களையும் உருவாக்குவதில் கைவினைக்கலையின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பது, அரும்பொருளகத்தின் மையக் கருப்பொருளை ஒத்திருக்கிறது.

ஆடை அலங்கார ஊடகம் மற்றும் தொழில்துறைகள் கல்வித்துறையில் இறுதி ஆண்டு இளநிலை (ஹானர்ஸ்) பட்டம் பயிலும் மாணவர்களுடன் இந்தக் கூட்டு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. மாணவர்கள் தங்களது பட்டக்கல்வி திட்டப்பணியின் ஒரு பகுதியாகக் கண்காட்சியைத் தொகுத்தனர். வடிவமைப்பாளர்களுடன் நடத்தப்பட்ட நேர்காணல்களின் காணொளிகளும், அவைசார்ந்த கட்டுரைகளும் உள்ளடங்கிய மின்பதிப்பு, கண்காட்சியின் துணை வளமாகவும், இத்திட்டப்பணியின் நிரந்தர மின்னிலக்கப் பதிவாகவும் பயன்படும்.

## 2 கண்காட்சித் தொகுப்பு அறிக்கை

பல கலாசார மக்கள் வாழும் சிங்கப்பூரில், தேசிய ஆடை அல்லது சிங்கப்பூரைப் பிரதிநிதிக்கும் குறிப்பிட்டதொரு தோற்றம் இருக்கிறதா எனச் சிலர் யோசிக்கக்கூடும். இதற்கு விடை காண, ஆடை அலங்காரத்தின் கண்கூடாத ஓர் அம்சத்தில் கவனம் செலுத்தினோம் – அதுதான் ஆடை வடிவமைக்கும் கலை. இந்தக் கண்காட்சி, சிங்கப்பூர் ஆடை அலங்கார வடிவமைப்பாளர்கள் பயன்படுத்தும் கைவினைக் கலைகளை ஆராய்கிறது. துணி வெட்டித் தைத்தல், பூத்தையல் வேலைப்பாடு முதல் லேசர் வெட்டு, முப்பரிமாண அச்சு வரை பலவகையான கைவினைக் கலைகளைக் கண்காட்சி வெளிப்படுத்துகிறது.

சிங்கப்பூர் மற்றும் ஆசியாவின் செழிப்பான ஆடை அலங்காரக்கலை, கைவினைக்கலை பாரம்பரியத்தைத் தழுவி, பன்முகமான படைப்புகளை உருவாக்கியுள்ள வடிவமைப்பாளர்களின் மாறுபட்ட அணுகுமுறைகளை நாங்கள் எடுத்துக்காட்ட விரும்புகிறோம். அவர்களுடன் கலந்துரையாடி, அவர்கள் செயல்படும் முறைகளையும், படைப்புகளில் வெளிப்படுத்தும் நினைவுகளையும் கண்டறிந்தோம். இதன்வழி, இன்றைய சிங்கப்பூர் ஆடை அலங்காரத்தின் இயல்பை ஒருங்கிணைத்திருக்கிறோம்.

இந்தக் கண்காட்சியில் இடம்பெறுவோர்: உலக அரங்கில் நெடுங்காலமாக சிங்கப்பூரைப் பிரதிநிதித்துவரும் நேர்த்தியான கைவினைப் படைப்புகளுக்குப் பெயர்பெற்ற ஆன்ட்ரூ கின்.

முன்தைத்த ஆடைகளோடும் பிரத்யேக ஆடைகளோடும் பலரையும் பல்லாண்டு காலமாகக் கவர்ந்துவரும் கோ லாய் சானின் லாய்ச்சான் மற்றும் கவிதா துளசிதாஸின் ஸ்டைல்மார்ட். பாரம்பரிய துணிகளையும் உத்திகளையும் நவீன சிங்கப்பூர் பெண்ணுக்கு ஏற்ப மாற்றியமைக்கும் ப்ரிசில்லா சண்முகத்தின் ஓங் சண்முகம்; மற்றும் லெட்டிஷியா பே, ஜேட் சுவீ ஆகியோரின் டைம் டெக்கன் டு மெக் ஏ டிரஸ். சிந்தனை மிகுந்த ஆடைகளை வடிவமைக்கும் ஹூ ருய்சியனின் ஸ்டூடியோ HHFZ மற்றும் கேரல் சென். ஆடை அலங்காரக் கலையின் எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனையைத் தூண்ட ஜமிலா லாவ், லயனல் வோங்கின் "Baëlf டிசைனும்" சேர்க்கப்பட்டிருக்கிறது.

கண்காட்சியில் அனைத்தையும் உள்ளடக்க இயலாவிட்டாலும், #SGFASHIONNNOW கண்காட்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள், சிங்கப்பூரின் ஆடை அலங்காரக் கைவினைக்கலை அடையாளத்தையும், அதன் எதிர்காலச் சாத்தியங்களையும் பற்றிய புதியதொரு புரிந்துணர்வை உருவாக்கும் என நம்புகிறோம்.

3 **சியொங்சாம்**

லெட்டிஷியா பே, ஜேட் ஸ்வீ
ஆகியோரின் *டைம் டெக்கன் டு மெக் ஏ டிரஸ்*
சிங்கப்பூர், 2017
பட்டு ஆர்கன்சா, வெளுக்கப்படாத பருத்தி சரிகை, குஞ்சங்கள், படிகக்கற்கள், மணிகள்
*டைம் டெக்கன் டு மெக் ஏ டிரஸ்* திரட்டு

சீன கலாசார வாரத்தை முன்னிட்டு வடிவமைக்கப்பட்ட இந்த ஆடை, பாரம்பரிய சியொங்சாமின் சிறப்பம்சங்களுக்கு புதுவடிவம் தருகிறது. ஆண்டுதோறும் நடைபெறும் அனைத்துலக நிகழ்ச்சியான சீன கலாசார வாரத்தில், சிங்கப்பூரையும் சீனாவையும் சேர்ந்த தலைசிறந்த ஆடை அலங்கார வடிவமைப்பாளர்களின் படைப்புகள் இடம்பெறுகின்றன. பாரம்பரிய சியொங்சாமில் கையால் மங்கிய சிவப்பு வண்ணம் தீட்டப்பட்ட குஞ்சங்கள் இணைக்கப்பட்டுள்ளன. நேர்த்தியான சரிகையின் நாடா வேலைப்பாடுகளில் படிகக்கற்கள் கையால் தைக்கப்பட்டுள்ளன. இந்த ஆடை, சிங்கப்பூர் நடிகை கான்ஸ்டான்ஸ் லாவின் கவனத்தை ஈர்த்தது. அவர் 2018ல் *கிரேசி ரிச் ஏஷியன்ஸ்* திரைப்படத்தின்

ஹாலிவூட் முன்னோட்ட நிகழ்ச்சிக்கு இதனை அணிந்து சென்றார்.

மணப்பெண் ஸ்டூடியோவில் வேலை செய்து கொண்டிருந்த வடிவமைப்பாளர்கள் லெட்டிஷியா பேயும் ஜேட் சுவீயும் 2010ல் *டைம் டெக்கன் டு மெக் ஏ டிரஸ்* வர்த்தகச் சின்னத்தைத் தொடங்கினார்கள். ஆரம்பத்திலிருந்தே இருவரும் புதுவிதமான வெட்டுகளையும் நேர்த்தியான கை வேலைப்பாடுகளையும் கொண்டு, பாரம்பரிய மணப்பெண் ஆடையிலிருந்து மாறுபடும் படைப்புகளை உருவாக்கி வருகின்றனர். வடிவமைப்பாளர்கள் இருவரும் தங்களது வாடிக்கையாளர்களுடன் அணுக்கமாகச் செயல்பட்டு, அவரவர் சுபாவத்தை வெளிப்படுத்தும் அற்புதமான ஆடைகளை உருவாக்கித் தருகின்றனர்.

## 4 காரா மற்றும் கெபாயா

*இட்டர்னல் வீவ்ஸ்* திரட்டு
கவிதா துளசிதாஸின் ஸ்டைல்மார்ட்
சிங்கப்பூர், கெபாயா: 2021; சேலை: 2017
சேலை: பட்டு ஜார்ஜட், பட்டுப் பூத்தையல்; கெபாயா: பருத்தி சரிகை, படிகக்கற்கள், மணிகள்
ஸ்டைல்மார்ட்டின் திரட்டு

வெண்ணிற மலர்வடிவ சரிகையில், நீல, தங்க மணிகள் பதித்த இரு பாகங்களுடன் இந்த கெபாயா செய்யப்பட்டது. பாரம்பரிய பார்சி பூத்தையல் வேலைப்பாடுகளை மையப்படுத்தும் நுட்பமான பட்டு நூல் வேலைப்பாடுகளுடன், தூய உள்ளத்தையும் பாதுகாப்பையும் பிரதிபலிக்கும் தாவர, விலங்கு வடிவங்களை காராவில் காணலாம். ஓரத்திலுள்ள வடிவங்கள், நடுவிலுள்ள பூத்தையல் வேலைப்பாட்டுக்குப் பொருத்தமாக உள்ளன. கவிதா துளசிதாஸின் வடிவமைப்புகளில்

பலவும், இந்தியாவில் நெய்து, பூத்தையல் வேலைப்பாடுகள் செய்யப்பட்ட துணிகளுடன் சிங்கப்பூரில் தயாரிக்கப்படுகின்றன.

துணி தைக்கும் தொழிலாக 1950களில் தொடங்கப்பட்ட ஸ்டைல்மார்ட், நவீன இந்திய ஆடை அலங்காரக் கடையாகத் திகழ்கிறது. பல தலைமுறையினரின் குடும்பத் தொழிலுக்கு 1999ல் கவிதா துளசிதாஸ் பொறுப்பேற்றுக் கொண்டார். பொருட்கள் வாங்குவதற்காக அம்மாவுடன் இந்தியாவுக்குச் சென்ற பயணங்களின்போது, துணி நெய்தல், பூத்தையல் வேலைப்பாடு போன்ற கைவினைக் கலைகளின் மதிப்பை அவர் உணர்ந்தார். மேற்கத்திய வடிவங்களில் ஆசிய கைவினைக் கலைகளை உள்ளடக்கும் பிரத்யேக ஆடை அலங்கார வடிவமைப்புகளுக்கு அவரது கடை பெயர்பெற்று விளங்குகிறது.

## 5 ஜிங் ஆடை

*எந்த்ரபாலஜி ஆஃப் கல்ச்சரல் டிமென்ஷியா* திரட்டு (கலாசார மறதி இனவியல் திரட்டு)

ஜமிலா லா மற்றும் லயனல் வோங்கின் "Baëlf டிசைன்"

சிங்கப்பூர், 2019

முப்பரிமாண அச்சுடன் திபியு (தெர்மோபிளாஸ்டிக் பாலியுரிதேன்), பிஎல்ஏ (பாலிஆக்டிக் அமிலம்) ஆகியவற்றுடன் முப்பரிமாண பிளாஸ்டிக் அச்சு, பாலியெஸ்தர் சிஃபான் உள்ளிழையுடன் நைலான் மார்க்கச்சு

சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகம்

*எந்த்ரபாலஜி ஆஃப் கல்ச்சரல் டிமென்ஷியா* திரட்டின் இந்த ஆடை, 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சிங்கப்பூரில் பிரபலமாக இருந்த சீனத் தெருக்கூத்து கலையின் ஜிங் ஆடைகளைத் தழுவி வடிவமைக்கப்பட்டது.

ஜிங் ஆடைகளில் பகட்டான
பதிப்புகளும், கடல்நாகச்
செதில்களின் சதுரங்க வடிவங்களும்
இடம்பெறுவது வழக்கம்.
உயர்பதவி வகிக்கும் சக்திவாய்ந்த
ஆண் கதாபாத்திரங்களே இந்த
ஆடைகளைப் பெரும்பாலும்
அணிவர். இந்த ஆடையில்,
பாரம்பரிய வடிவங்களுக்குப்
பதிலாக ஒன்றுடன் ஒன்று
பின்னிப்பிணைந்த
முப்பரிமாண பகுவல் வடிவங்கள்
அச்சிடப்பட்டுள்ளன. அவ்வடிவங்கள்
பறந்து செல்லப் போவதுபோல
உடலிலிருந்து நீட்டியுள்ளன. இந்த
ஆடையின் வடிவமைப்பாளர்கள்,
சிங்கப்பூர் தேசிய
அரும்பொருளகத்தில் உள்ள ஜிங்
ஆடைகள் திரட்டை மேற்கோளாகப்
பயன்படுத்தினார்கள்.
அரும்பொருளகம் பொறுப்பளித்து
வடிவமைக்கப்பட்ட நான்கு
ஆடைகளில் இதுவும் ஒன்று.

ஆடை அலங்காரக் கலைஞர் ஜமிலாவும் தொழில்துறை வடிவமைப்பாளர் லயனல் வோங்கும் 2016ல் தொடங்கிய "Baëlf டிசைன்", முப்பரிமாண அச்சு, லேசர் வெட்டு போன்ற புதுமையான தொழில்நுட்பங்களில் நிபுணத்துவம் பெற்றுள்ளது. இந்த வர்த்தகச் சின்னம், இயந்திரத்தையும் செயற்கை நுண்ணறிவையும் பயன்படுத்தி, இயல்புநிலைக்குச் சவால்விடுக்கும் ஆடை அலங்காரப் படைப்புகளை உருவாக்கி, சாத்தியங்களுடன் ஆராய்ச்சி செய்கிறது.

## 6 சியொங்சாம்

*வாண்டர்லக்ஸ்* திரட்டு, 2018
வசந்தகாலம் / கோடைக்காலம்
கோ லாய் சானின் லாய்ச்சான்
சிங்கப்பூர், 2017
பட்டு வலைத்துகில், சரிகை, மணிகள்
ஆசிய நாகரிக அரும்பொருளகம்

இந்த ஆடை, 2017ஆம் ஆண்டின் சிங்கப்பூர் ஆடை அலங்கார வாரத்தில் அறிமுகமானது. அவ்வாண்டு, உள்ளூர் தலைப்புச்செய்தி அங்கமாக லாய்ச்சான் இடம்பெற்றது. சியொங்சாம் போன்ற பாரம்பரிய ஆடைகளைச் சமகால பாணிகளுக்கு ஏற்ப மாற்றியமைத்து, "சிங்கப்பூர் ஆடைக்கு" புதுவடிவம் கொடுத்தது இந்தத் திரட்டு. இந்த ஆடையில் சீரான தையலுடன் புடைப்பான வேலைப்பாடுகள் திறம்பட ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

ஆடையின் வடிவம் பாரம்பரிய சியொங்சாம் போல இருந்தாலும், ஒளி ஊடுருவக்கூடிய மென்மையான துணியுடன் சமகால பாணி புகுத்தப்பட்டிருக்கிறது. ஆடை முழுவதும் மலர்வடிவ சரிகைகளும், வலைத்துகில் நாடாக்களும், மணிகளும் முழுமையாகப் பூத்தையல் செய்யப்பட்டுள்ளன.

கோ லாய் சான், சிங்கப்பூரின் சியொங்சாம் வித்தகர் என்றறியப்படுகிறார். அவர் வடிவமைக்கும் ஆடைகள், நேர்த்தியான வேலைப்பாடுகளுடன் அவருக்கே உரிய தனித்துவமான பாணியைக் கொண்டிருக்கும். 1991 முதல், இத்தாலியப் பட்டு கிரேப், மென்மையான பிரெஞ்சு சரிகை முதல் எளிமையான ஜப்பானியப் பட்டு வரை பல்வேறு உலக நாடுகளின் துணிகளை ஒருங்கிணைத்து வருகிறார்.

ஆர்ச்சர்ட் சாலையில் பாரகனில் உள்ள அவரது நவீன ஆடை அலங்காரக் கடை, சியொங்சாமுக்கு அவர் அளித்திருக்கும் அற்புதமான வடிவங்களின் பொக்கிஷமாகத் திகழ்கிறது.

7 **நீளாடை**

*மே தேர் பி லைட்* திரட்டு
ஆன்ட்ரூ கின்
பாரிஸ், 2020
அசிடேட் மற்றும் விஸ்கோஸ் கிரேப்
ACM, ஆன்ட்ரூ கின் வழங்கிய அன்பளிப்பு

இந்த ஆடை, ஆன்ட்ரூ கின்னின் *மே தேர் பி லைட்* என்ற தலைப்பிலான 2021 வசந்தகால / கோடைக்காலத் திரட்டைச் சேர்ந்தது. உலகெங்கிலும் கிருமிப்பரவலால் மக்கள் நடமாட்டம் முடக்கப்பட்டிருந்த நிலையில், நம்பிக்கையும்,

மகிழ்ச்சியும், உற்சாகமும் அளிக்கும் ஒரு திரட்டை உருவாக்க அவர் முற்பட்டார். முற்றிலும் வெண்ணிறத்திலான இந்த ஆடை, பரிசுத்தம், தூய்மை, மறுபிறப்பு ஆகியவற்றைக் குறிக்கிறது. மென்மையான கிரேப் துணியில் வடிவமைக்கப்பட்ட இந்த ஆடையில், ஓர வேலைப்பாடுகள் கொண்ட மேலணியும் உள்ளது. "மணிலா சால்வை" என்றழைக்கப்படும் 20ஆம் நூற்றாண்டின் சீன ஏற்றுமதி சால்வைகளை இந்த மேலணி நினைவூட்டுகிறது.

பாரிஸ் நகரைத் தளமாகக் கொண்ட ஆன்ட்ரூ கின், தனது பெயரிலான வர்த்தகச் சின்னத்தை 1996ல் அறிமுகப்படுத்தினார். லண்டனின் செயின்ட் மார்டின்ஸ் கலை, வடிவமைப்புப் பள்ளியிலும், மிலானின் டோமஸ் கல்விக் கழகத்திலும் படித்து பட்டம் பெற்ற

ஆன்ட்ரூ கின்னின் கைவண்ணங்கள், கண்கவர் வண்ணங்களையும், விலையுயர்ந்த பொருட்களையும் கொண்டு கிழக்கையும் மேற்கையும் ஒருங்கிணைக்கும் நுட்பமான வேலைப்பாடுகளுடன் வடிவமைக்கப்படுகின்றன. முன்தைத்த ஆடைகளும் பிரத்யேகமாகத் தயாரிக்கப்படும் ஆடைகளும் அவற்றுள் அடங்கும். பாரிஸ் ஆடை அலங்கார வாரத்தில் தற்போது சேர்க்கப்பட்டிருக்கும் ஒரே சிங்கப்பூர் வடிவமைப்பாளரான ஆன்ட்ரூ கின்னின் கைவண்ணங்கள், உலகெங்கிலும் மேன்மக்களையும், அமெரிக்கா, ஐரோப்பா, ஆசியா வட்டாரங்களிலுள்ள பிரபலங்களையும் கவர்கின்றன.

8

## கேப் கைப்பகுதியுள்ள மேல்சட்டையும் கால்சட்டையும்

*நியோடெரிக்கா திரட்டு*
கேரல் சென்
சிங்கப்பூர், 2020
பட்டு சாட்டின், வெள்ளி நூலும் மணிகளும் பின்னப்பட்ட சர்தோசி பூத்தையல் வேலைப்பாடு
கேரல் சென்னின் திரட்டு

இந்த ஆடை, கேரல் சென்னின் *நியோடெரிக்கா* அறிமுகத் திரட்டைச் சேர்ந்தது. சிங்கப்பூரின் நவீனமயம், அனைவரையும் உள்ளடக்கிய கலாசாரம், கட்டடக்கலை ஆகியவற்றை மையமாகக் கொண்டு இவ்வாடை வடிவமைக்கப்பட்டது. புதியது அல்லது இளையது என்ற அர்த்தம் கொண்ட "நியோடெரிகோஸ்" எனும் ஆதிகால கிரேக்கச் சொல்லிலிருந்து தனது திரட்டுக்கு அவர் பெயரிட்டார். தெற்காசிய, மத்திய ஆசிய

வட்டாரங்களின் பாரம்பரிய கைவினைக் கலைகளைக் கௌரவிக்கும் வகையில், வெள்ளி நூலையும் மணிகளையும் பயன்படுத்தும் சர்தோசி பூத்தையல் வேலைப்பாட்டை ஆடையில் உள்ளடக்கி இருக்கிறார். அவரது வெற்றிபெற்ற திரட்டிலுள்ள ஐந்து ஆடைகளிலும் கவனமாகவும் அளவாகவும் பூத்தையல் வேலைப்பாடுகள் இடம்பெற்றுள்ளன. அதோடு, பெரும்பாலான ஆடைகள் வழக்கத்திற்கு மாறான முறைகளையும் துணிகளையும் கொண்டு செய்யப்பட்டன. லேசர் வெட்டு, மறுபயனீடு செய்யப்பட்ட துணி போன்றவை இதற்கான சில எடுத்துக்காட்டுகள். நடிகை கீகீ லிம், சாங்கி விமான நிலையத்தில் 2021ல் நடைபெற்ற நட்சத்திர விருது நிகழ்ச்சிக்கு இந்த ஆடையை அணிந்து சென்றார்.

கேரல் சென் 2015ல் கொவிடெல்லா எனும் ஆடம்பர ஆடை வாடகை தளத்தை அமைத்த பிறகு, 2020ல் தனது பெயரிலான வர்த்தகச் சின்னத்தைத் தொடங்கினார். உள்ளூரில் தலையெடுத்துவரும் வடிவமைப்பாளர்களுக்காக சிங்கப்பூர் நெசவுத்துணி, ஆடை அலங்காரச் சம்மேளனம் 2020ல் ஏற்பாடு செய்த "சிங்கப்பூர் ஸ்டோரீஸ்" ஆடை அலங்கார வடிவமைப்புப் போட்டியின் வெற்றியாளர் சென்.

9 **மேலணியுடன் சியொங்சாம்**
ப்ரிசில்லா சண்முகத்தின் ஒங் சண்முகம்
சிங்கப்பூர், 2015
பட்டு ஜெக்கார்ட், சிஃபான்
ஆசிய நாகரிக அரும்பொருளகம், பேஜ் பார்க்கரின் அன்பளிப்பு

நன்கொடையாளர் பேஜ் பார்க்கருக்காகப் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட ஒங் சண்முகம் ஆடை இது. பளிச்சிடும் சிவப்பு, வெள்ளை நிறத்தில், நேர்த்தியான இழைப்பின்னல் பட்டு ஜெக்கார்ட் துணியில் ஆடை வடிவமைக்கப்பட்டுள்ளது. அச்சு, அளவு, இழைப்பின்னல் அனைத்தையும் சமநிலைப்படுத்துவதில் வடிவமைப்பாளர் ப்ரிசில்லா சண்முகம் கைதேர்ந்தவர் என்பதை இந்த ஆடை எடுத்துக்காட்டுகிறது. சியொங்சாமின் கனத்த ஜெக்கார்ட் துணிக்கு நேர்மாறாக, மென்மையான பட்டு மேலணி அமைகிறது. ஆடையின் அச்சு வடிவங்களுக்கு ஏற்ப ஓரங்களும் கவனமாக அமைக்கப்பட்டுள்ளன. எழுத்தாளர் பேஜ் பார்க்கர், 2016ல் கேன்ஸ் திரைப்பட விழாவுக்கு இந்த ஆடையை அணிந்து சென்றார்.

இதன் நிறங்களும் சியொங்சாம் பாணியும் சிங்கப்பூரைப் பிரதிபலிப்பதாக அவர் கருதினார். அந்த ஆண்டு கேன்ஸ் திரைப்பட விழாவில் அறிமுகமான இயக்குநர் பூ ஜுன்ஃபெங்கின் *த அப்ரன்டீஸ்* படத்தின் நிர்வாகத் தயாரிப்பாளர் அவர்.

முன்னாள் வழக்கறிஞர் ப்ரிசில்லா சண்முகம் 2010ல் தொடங்கிய *ஓங் சண்முகம்*, பாரம்பரிய ஆசிய துணிகளையும் பாணிகளையும் உள்ளடக்கும் சமகால வர்த்தகச் சின்னமாகப் பெயர் பெற்று விளங்குகிறது. அவர் தேர்ந்தெடுத்த காட்சிப் படைப்புகள், உரைநடைகள் வாயிலாக, பன்மயம், கலாசார உரிமை, பெண்களின் சக்தி ஆகியன பற்றிய தனது புரிதலை அவர் வெளிப்படுத்துகிறார்.

## 10 சியொங்சாம்

*மோர் தென் தெட்* திரட்டு
ஹூ ருய்சியனின் ஸ்டூடியோ HHFZ
சிங்கப்பூர், 2021
பாலியெஸ்தரில் மின்னிலக்க அச்சு
ஸ்டூடியோ HHFZ திரட்டு

*மோர் தென் தெட்* திரட்டின் இந்த ஆடையில், சிங்கப்பூர் படவரைவாளர் லாய் இயோ வரைந்த வடிவம் அச்சிடப்பட்டுள்ளது. சமூக ஊடகத்தில் காணப்படும் மனதைப் புண்படுத்தும் கருத்துகளை எதிர்த்து, ஒவ்வொருவரும் தத்தம் உடலை நேசிக்கவேண்டும் என்ற எளிமையான கருத்தை அவர் வெளிப்படுத்துகிறார். அன்றாட வாழ்க்கையின் மின்னிலக்க அனுபவம், இயல்பான அனுபவம் இரண்டையும் உள்ளடக்கிய சமகால சிங்கப்பூர் ஆடை அலங்காரத்திற்கு இந்த ஆடை சிறந்ததோர் எடுத்துக்காட்டு.

ஹூ ருய்சியன் தெமாசெக் பலதுறைத் தொழில்கல்லூரியில் பட்டம் பெற்ற பிறகு, 2018ல் ஸ்டூடியோ HHFZ நிறுவனத்தைத் தொடங்கினார். பாரம்பரிய ஆடைகளுக்குச் சமகால வடிவம் கொடுத்து, இளைய வாடிக்கையாளர்கள் அவற்றை வாங்கி வைத்துக்கொள்ள தூண்டுதல் அளிப்பதில் ஸ்டூடியோ HHFZ கவனம் செலுத்துகிறது. பாரம்பரிய சியொங்சாம் ஆடைகளின் உடலமைப்பையும் நுணுக்கங்களையும் எளிய நடமாட்டத்திற்கு ஏதுவாக அவர் மாற்றியமைக்கிறார். அதோடு, உள்ளூர் கலைஞர்களுடன் கூட்டிணைந்து, தனித்துவமான கதைகளை விவரிக்கும் அச்சு வடிவங்களையும் அடிக்கடி உருவாக்குகிறார்.

11

## Acknowledgements

### Major supporter

Paige Parker

### Designers featured

Baelf Design, Carol Chen, Andrew Gn, LAICHAN, Ong Shunmugam, Studio HHFZ, Stylemart, Time Taken to Make a Dress

### Donors and lenders

Andrew Gn, Paige Parker, National Museum of Singapore

### LASALLE College of the Arts School of Fashion

Staff: Circe Henestrosa, Nadya Wang, Daniela Monasterios

Students: Guo Li Le, Jessica Suwito, Felicia Toh, Celestine Wong, Gabrielle Yeo

### Textile and Fashion Federation Singapore (TaFF)

Ho Semun, Perng Aw, Leonard Choo

## Judges

Circe Henestrosa, Head, School of Fashion, LASALLE College of the Arts

Ho Semun, CEO, Textile and Fashion Federation (TaFF)

Tjin Lee, Founder, Mercury Marketing & Communications

Kennie Ting, Director, ACM; Group Director of Museums, National Heritage Board

## Mentorship Team from ACM

Curatorial: Jackie Yoong

Exhibitions: Ng Wan Gui, Arielle Lau

Audience: Barbara Fras, Nur Farhana Salleh, Melissa Viswani, Prunella Ong, Tara Marie Donohue